செய்தி வெளியீடு எண்: 551 நாள்:28.08.2019

<u>செய்தி வெளியீடு</u>

**<u>1000க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்கல்லூரி முதல்வர்களுக்கான கருத்தரங்கம் மற்றும் பயிற்சி முகாம் தமிழ்நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி மன்றமும், தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்ககமும் இணைந்து நடத்துகிறது.</u>**

சென்னை – ஆகஸ்டு 26, 2019 தமிழ் நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி மன்றமும் , தொழில்நுட்பக் கல்வி இயக்ககமும் இணைந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம், தன்னாட்சி பொறியியல் கல்லூரிகள், சுயநிதி பொறியியல் கல்லூரிகளின் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பணியமர்த்தும் அலுவலர்களையும், இந்திய தொழில்நுட்ப நிறுவன ஆராய்ச்சி பூங்கா மற்றும் மதராஸ் தொழில் நுட்ப நிறுவனம் – சீமென்ஸ் திறன் பயிற்சி மையங்களில் பார்வையிடல் உடனான ஒரு நாள் கருத்தரங்கம் மற்றும் பயிற்சி முகாம் மாதம் முழுவதும் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு மாவட்ட அளவில் உள்ள அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிக்கப்படுவதால் அவர்களுக்கிடையேயான புரிந்துணர்வு அதிகரிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட வழிவகை செய்யப்பட உள்ளது.

இதன் முதல்நாள் பயிற்சி உயர்கல்வித் துறை அரசு முதன்மைச் செயலர், திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதற்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்ற துணைத்தலைவர், முனைவர் மயில்சுவாமி அண்ணாதுரைஅவர்கள், இப்பயிற்சியில் பங்கு கொண்ட அனைவருடனும் கலந்துரையாடினார். தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் கீழ்காணும் பயிற்சிக்கான ஏற்பாடு செய்தார்.

1. மொத்த மாணவர் சேர்க்கை விகிதாசாரத்தை அதிகரிக்கும் செயல்பாட்டுத் திட்டம்,

2. கல்லூரியில் பயிலும் போது தொழில் நிறுவன பயிற்சி விகிதாசாரத்தை மேம்படுத்தும் செயல்பாட்டுத் திட்டம் (Internship ratio),
3. பணியமர்த்தல் விகிதாசாரத்தை அதிகரிக்க செயல்பாட்டுத் திட்டம் (Placement ratio),
4. தொழில் தொடங்குவோர் மேம்பாட்டு பயிற்சி மேற்கொள்வதன் முக்கியத்துவம்,
5. தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு மேம்படுத்தும் செயல்பாட்டுத் திட்டம்,
6. அறிவுசார் சொத்துரிமை பதிவுகளை அதிகப்படுத்திட செயல்பாட்டுத் திட்டம்,
7. முதலாம் ஆண்டு தேர்ச்சி சதவீதத்தை பெருக்கிட செயல்பாட்டுத் திட்டம் மற்றும் முனைவர் பட்டப்படிப்புகான பதிவுகளை அதிகப்படுத்திட செயல்பாட்டுத் திட்டம்,
8. தேசிய அங்கீகார வாரியம் (NBA), தேசிய தர அங்கீகார கூட்டமைப்பு (NAAC) ஆகியவற்றில் நிலையினை மேம்படுத்த செயல்பாட்டுத் திட்டம்.

ஒரு மாத காலம் நடக்கும் இந்த பயிற்சி முடிவு பெற்றவுடன், ஒவ்வொரு முக்கிய முடிவு பகுதிகளின் கீழ் (key result area) ஒரு செயல்பாட்டு குழு (working group) உருவாக்கப்பட்டு பல்வேறு ஆலோசனைகள் பெறப்பட்டு அதனை ஒருங்கிணைத்து அதன்மீது நடவடிக்கை மேற்கொண்டு பொறியியல் கல்வித்துறையில் புதிய சாதனை நிகழ்த்த வழிவகை செய்யப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**